# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 13.3.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 5 நாள் 28.02.2017ன் அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான குரூஸ்புரம் சமுதாய நலக்கூடம் கட்டிடத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளி நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது தூத்துக்குடி பொதுப்ணிதறையினரின் நிலத்தின் வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் இவ்விசைப்பள்ளி கட்டிடத்தின் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ. 39118/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி இசைப்பள்ளி தலைமையாசிரியரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் இசைப்பள்ளியில் குறைந்த எண்ணிக்கையிலான 34 ஏழை மாணவர்கள் மட்டுமே பயின்று வரும் நிலையில் ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களிடம் இருந்து ரூ. 152/– மட்டுமே அரசு கட்டணமாக வல் செய்து கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது எனவும், இதனை கருத்தில் கொண்டு ரூ 15000/– க்கும் குறைவாக மாத வாடகை நிர்ணயம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.<br>மேற்படி இசைப்பள்ளியில் குறைவான கட்டணத்தில் மாணவர்களுக்கு இசை பயிற்றுவிப்பதாலும் கடந்த இரண்டு ஆண்டு காலமாக இக்கட்டிடம் தொடர் பயன்பாட்டில் இல்லாமல் இருந்து வருவதும் தெயிவாகிறது. இது போன்ற மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்கள் செயல்பாட்டில் இல்லாத ஒரு சூழ்நிலையில் அக்கட்டுமானங்கள் பாழடைந்த நிலைக்கு தள்ளப்படும். எனவே இசைப்பள்ளி கட்டிட வளாகத்தை முறையாக பராமரிக்கப்படுதல் வேண்டும் எனவும் தவிர இக்கட்டிடத்தை மாநகராட்சி பயன்பாட்டுக்குத்தேவை என்ற நிலையில் 2 வார காலக்கெடு வழங்கப்படும் எனவும் அக்காலகெடுவிற்குள் மாநகராட்சி கட்டிடத்தினை எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் மாநகராட்சியுடம் திரும்ப ஒப்படைக்கப்படுதல் வேண்டும் எனவும் மேலும் மாநகராட்சிக்கு சொந்மான பள்ளிகளில் இருந்து தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு இவ்விசைப்பள்ளியில் இலவசமாக இசைக் கற்றுத்தரப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு இசைப்பள்ளியை மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான | 45)அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கட்டிடத்தில் இலவசமாக நடத்த அனுமதி வழங்க மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம். அ16–00524–2017 | |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சியில் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் பயன்பாட்டில் இருந்து வரும் தெருவிளக்குகள் அனைத்தும் கடந்த காலங்களில் விலைப்புள்ளிகள் (2012–13ம் வருடத்திய விலை விகிதம்) பெற்று உள்ளூர் நிறுவனங்கள் மூலம் இயக்கி பராமரிப்பு செய்யப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் நகரில் உள்ள அனைத்து வகை தெருவிளக்குகளையும் அரசின் வழிகாட்டுதல்படி மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED தெருவிளக்குகளையும் மாற்றம் செய்து மின் சேமிப்பு செய்யும் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த ESCO திட்ட பணிகள் செயல்பாட்டுக்கு வரும் காலம் வரை ஏற்கனவே இருந்து வரும் 15285 தெருவிளக்குகளையும் பொதுமக்களுக்கு சிரமம் இல்லாமலும் இரவு நேர போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமலும் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசிய ஒன்றாக உள்ளது.<br><br>எனவே பொதுமக்கள் நலன் மற்றும் நிர்வாக பராமரிக்க நலன் கருதியும் மாநகராட்சி 60 வார்டு தெருவிளக்குகளை 40 வார்டு கொண்ட பழைய மாநகராட்சி பகுதிகளாகவும் 20 வார்டு கொண்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளாகவும் தனியாக இரண்டு பகுதிகாக பிரித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, ஓராண்டு காலம் இயக்கி பராமரிக்க ஏதுவாக மாநகராட்சி நிர்வாக அணையரகஇ தலைமைப் பொறியாளர் அவர்கள் தமது 3899/2016/DO1 நாள் 06.02.2018 எண்ணிட்ட கடிதத்தில் ஒப்புதல் வழங்கிய (DATA மற்றும் DOCUMENT) விலை விகிதத்தின்படி கீழ்க்கண்ட இரண்டு பணிகளாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்தகவும், அதற்குரிய மதிப்பீட்டு தொகைகளுக்கும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>வ.எண் பணியின் பெயர்</u> <u>மதிப்பீட்டு தொகை</u> **(ரூ.இலட்சத்தில்)**<br>**1)** தூத்துக்குடி மாநகராட்சியில் 40 வார்டு கொண்ட பழைய மாநகராட்சி பகுதிகளில உள்ள அனைத்து தெரு விளக்குகளையும் ஓராண்டு காலம் இயக்கி பராமரித்தல். — ரூ. 94.50<br><br>**2)** தூத்துக்குடி மாநகராட்சியில் 40 வார்டு கொண்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில உள்ள — ரூ. 68.50 | 46) அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனைத்து தெருவிளக்குகளையும் ஓராண்டு காலம் இயக்கி பராமரித்தல்.<br><br>**அலுவலகக் குறிப்பு –**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இப்பணிகிளுக்கு ஆகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள 2018–19ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் வழிவகை செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். | |
| | 3)இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் மூலம் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு மற்றும் மலேரியா போன்றவற்றினை தடுக்கும் பொருட்டு மாநகரப் பகுதிகளில் கொசுப்புழுக்களை கட்டுபடுத்தும் புகை மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி புகை மருந்தில் கலந்து தெளிக்க பயன்படுத்தப்படும் டீசல் மற்றும் பெட்ரோல் அவசர அவசியம் கருதி வாங்கவும்அதற்காக ஏற்படும் உத்தேச செலவுத் தொகை (ரூ.15.00,000/–) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்2/5135/17 | 47) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பான முறையில் துப்புரவு பணி மேற்கொள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பாதுகாப்பு உபகரணங்களான ஒளிரும் சட்டை (Reflecting Jacket) கையுறை (Rubber Gloves) காலுரை (Gumboot) முகவுரை (Nose Mask) வாங்குவதற்கு அனுமதியும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ 2.00 இலட்சம் பொது நிதியிலிருந்து செலவு மேற்கெசாள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/5135/17 | 48) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 5) இம்மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட போது அரசாணை எண். 2653 / பல்வகை/ சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 14.11.1972ன் படி மலேடியாயா தடுப்பு மற்றும் நகர்ப்புற மலேரியா கொசு ஒழிப்பு திட்ட பணிகளுக்காக களப்பணியாளர்கள் 55 மற்றும் தலைமை பணியாளர்கள் 22 என அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.<br>தற்போது 60 களப்பணியாளர்கள் இடங்களை காலியாக உள்ளன. டெங்கு காய்ச்சல் பரவுதலை கட்டுப்படுத்திடவும், இப்பணிகளை தொய்வின்றி அன்றாடம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் ஒன்றாகவும், அவசியமானதாகவும் உள்ளதாலும் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதத்தில் 60 | 49) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படடது. |

| | | |
|---|---|---|
| | களப்பணியாளர்களை இப்பணிகளுக்கு பணிமர்த்துவதால் செலவினங்கள் மிக குறைவு என்பதாலும் டெங்கு காய்ச்சல் பரவுதலை கட்டுப்படுத்திடுவதற்கான சாத்தியம் கூறுகள் உள்ளதாலும் மன்ற அனுமதி பெற்ற மேற்படி பணியாளர்கள் கொண்டு 6 மாதங்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ. 3500000/– (முப்பந்தைந்து லட்சங்கள் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்1/868/2018 | |
| | 6) தூய்மைக் காவலர் பணிக்கு ஏதாவது ஒரு பட்டபடிப்பில் தேர்ச்சி / சுகாதார ஆய்வாளர் பயிற்சி பெற்ற நபர்களைக்கு முன்னுரிமை அடிப்படையிலும் 6 மாதத்திற்கு தற்காலிகமாக 10 நபர்களை வெளிகொணடர்வு முறையில் (outsourcing) தேர்வு செய்திடவும் 10 நபர்களுக்கு 6 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 10,00,000/–க்கும் (பத்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்பட்டதற்கு பார்வையில் கண்டுள்ள மன்றத்தீர்மானத்தில் மன்றம் அனுமதியளித்துள்ளது.<br>தற்போது கூடுதலாக எட்டு நபர் தேவைப்படுவதால் ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்ட 10 நபர்களை சேர்த்து 18 நபர்களை தூய்மைக் காவலராக வெளி கொணர்வு முறையில் (Outsourcng) தேர்வு செய்திடவும் 18 நபர்களுக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 2500000/–க்கும் (இருபத்தி ஐந்து லட்சம் மட்டும) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம் எச்1.4664/2017 | 50) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 7) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தின் அருகில் கிழக்கு பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி பாரம்பரிய பூங்கா அமைப்புதற்கு சர்வே எண். 417/A/ விஸ்தீரணம் 1.010 ஹெக்டேர் இடத்தில் பணி தேர்வு செய்யப்பட்டு தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் பூங்கா பணிகள் முடிக்கப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக கடித ந.க.எண். அ1/229.2018 நாள் 12.03.2018 கடிதம் மூலம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பராமரிப்பு பணிகள் செய்வதற்கும், மின்கட்டணத்தொகை மாநகராட்சி மூலம் செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண். எப்1/729/2018மே.ம | 51. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 8) துத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 09.01.2018ஆம் தேதிய கடிதம் Roc.Co.01/2018 ல் வ.உ.சி. துறைமுக பொறுப்பு கழகத்திற்கு சொந்தமான இடத்தில் ரோச் பூங்காவிற்கு எதிரின் புதிய படகு குழாம் அமைக்கும் பணிக்கு ரூ. 79.60 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் | 52) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 21.02.2018ஆம் தேதிய கடிதத்தில் Roc.Co.(1)/2018 (J4) வ.உ.சி. துறைமுக கழகத்தினர் C.S.R நிதியில் இருந்து (கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதி) மேற்படி பணிக்கான தொகை ஒதுக்கீடு செய்வதற்கான சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** பதவு செய்யலாம்.<br>ந.க.எண்.00118.இ5/2018 | |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சரான வாறுகால் வசதி இல்லாததால், மேற்கண்ட பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந6) அரசாணை (டி) எண.6 நாள் 23.01.2018 அரசாணையில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை உலன வங்கி நிதி ஆதாரத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதுார வளர்ச்சி திட்டத்தின் (TNUSDP) கடன் மற்றும் மான்யம், உள்ளாட்சி பங்கு தொகையுடன் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி முதல் கட்ட (Phase-I) பணிகளாக செயல்படுத்த ரூ. 96.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணையிட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது. | 53) பதிவு செய்யப்பட்டது. |

| **வ.எண்.** | **நிதி ஆதாரம்** | **தொகை** | **சதவீதம் (%)** |
|---|---|---|---|
| 1 | கடன் தொகை (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி) TNUDF உலக வங்கி நிதியுதவியுடன் (TNUSDP) | 0.61 | 10% |
| 2 | மான்யம் (Project Substainability Grant Fund PSGF) உலக வங்கி நிதியுதவியுடன் (TNUSDP) | 76.90 | 80% |
| 3 | மாநகராட்சிப் பங்கு தொகை | **9.61** | 10% |
| | மொத்தம் | **96.12** | 100% |

எனவே மேற்காணும் விபரப்படி திட்டப்பணியினை செயல்படுத்த வரப்பெற்ற அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம். இ1/9047/2014

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 13.03.2018